**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8092395

1. District மாவட்டம் : Theni District PS காவல்நிலையம்: VSAC, Theni Year ஆண்டு: 2019 FIR No. மு.த.அ. எண்: 07/19 Date நாள்: 25.09.19

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988, as amended Prevention of Corruption Act 2018 Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 18.09.19 Date to : நாள் வரை 23.09.19
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை 11.00 Hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 25.09.19 Time : நேரம் 12.00 Hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம் 12.00 Hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Hand written petition

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து செல்லவேண்டிய தூரமும், திசையும் About 7 Kms North West
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி O/o the District Educational Officer, Allinagaram, Theni District.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டவர்/ தகவல் தந்தவர் பெயர் P. Suresh (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Pandian
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 43 yrs (d) Nationality நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Sweeper (g) Address : முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டுக்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுவிவரங்கள் விவரங்கள் (தேவைப்படின் தனித்தாள் இணைக்கவும்)
1) Murugan, Superintendent. O/o the D.E.O, Theni.
2) Ramesh, Clerk, O/o the D.E.O, Theni.

8. Reasons for delay in reporting by the complainant / Informant
குற்றமுறையிட்டவரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
— NIL —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவு போன / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவுபோன / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural Death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு வழக்கு ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet if required):
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம், (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Computer typed Separate Sheet Enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........ Rank .................. to take up the Investigation / Refused Investigation / transferred to PS .................................. on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரில் புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் கையொப்பம் / பெருவிரல் ரேகை

Signature of the Officer in charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Name: பெயர் L. Raju,
Rank: நிலை Dy. Supdt. of Police, No. எண்
Vigilance & Anti-Corruption,
Theni District.

15. Date & Time of despatch to the court : 25.09.19 12.50 Hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாள், நேரம்

12. F.I.R. contents (Attach separate sheet if required):
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தேனி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.**7/2019**-ன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி.

**சமர்ப்பிக்கப்படுகிறது:** தேனி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் துணை கண்காணிப்பாளர் ஆகிய நான் இன்று 25.09.2019-ம் தேதி 12.00 மணிக்கு நிலையத்தில் இருந்தபோது தேனி மாவட்டம், பெரியகுளம் தாலுகா, தென்கரை, கதவு எண்.4, தோட்டி காலனி தெருவில் வசித்துவரும் திரு.பாண்டியன் மகன் திரு.P.சுரேஷ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரின்பேரில் கீழ்க்கண்ட முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படுகிறது. மேற்கண்ட புகாரின் விபரம் பின்வருமாறு:- நான் போடிநாயக்கனூர் தாலுகா சிலமலை அரசு மேல்நிலைப்பள்ளியில் துப்புரவாளராக கடந்த 23.11.2012 முதல் தற்போது வரை பணிபுரிந்து வருகிறேன். நான் பணியில் சேர்ந்தபோது துப்புரவாளர் மற்றும் வாட்ச்மேன் ஆகிய பணிகளுக்கு ஆள் எடுத்தார்கள். துப்புரவாளர் பணிக்கு ரூ.3500 தொகுப்பூதியமும், வாட்ச்மேன் பணிக்கு ரூ.10000 தொகுப்பூதியமும் வழங்கினார்கள். ஒரே நேரத்தில் பணியில் சேர்ந்தும், இந்த தொகுப்பூதிய பண வித்தியாசத்தின் காரணமாக துப்புரவு பணியாளர்கள் சார்பாக சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் 17663/2014-ன்படி வழக்கு தொடரப்பட்டது. வழக்கின் தீர்ப்பானது 25.01.2018ல் துப்பரவு பணியாளர்கள் அனைவருக்கும், வாட்ச்மேன் பணியாளர்களுக்கு வழங்கிய ஊதியமே வழங்கப்படவேண்டுமென்றும், பணி நிரந்தரம் செய்யவும் ஆணையிட்டது. அதனடிப்படையில் அரசு உத்திரவின்பேரில் தேனி மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அவரது செயல்முறை ஆணை ந.க.எண்.1526/ஏ1/2019, நாள்.01.04.2019-ன்படி துப்பரவு பணியாளர்களுக்கு வாட்ச்மேன் பணியாளர்களுக்கு வழங்கிய ஊதியத்தையே பணியில் சேர்ந்த நாள் முதல் கணக்கிட்டு வழங்கச்சொல்லியதன்பேரில் 2012 முதல் இருந்த நிலுவைத்தொகை அனைத்தையும் பெற்றுவிட்டேன். மேலும் ஜூலை -2019ல் மாவட்ட கல்வி அலுவலகத்தில் இருந்து துப்புரவு பணியாளர்கள் வாட்ச்மேன் பணியிடத்திற்கு மாற விரும்பினால், விருப்பமனு கொடுக்கலாமென தெரிவித்தார்கள். அதனடிப்படையில் துப்புரவு பணியிலிருந்து, வாட்ச்மேன் பணிக்கு மாறுதல் செய்துதருமாறு 16.07.2019ம் தேதி சிலமலை அரசு மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் மூலமாக மாவட்ட கல்வி அலுவலருக்கு விருப்பமனு கொடுத்திருந்தேன். மேலும் நான் கடந்த 09.09.2019ம் தேதி மாவட்ட கல்வி அலுவலருக்கு துப்புரவு பணியிலிருந்து, வாட்ச்மேன் பணிக்கு தேனி அல்லிநகரம் மற்றும் பூதிப்புரம் அரசு மேல்நிலைப்பள்ளிகளில் மாறுதல் செய்துதருமாறு தபால்மூலம் மனுசெய்தேன். அதன்பின்பு மூன்று நாட்கள் கழித்து, நான் தேனி மாவட்ட கல்வி அலுவலகத்திற்கு சென்று DEO திருமதி. ராஜேஸ்வரி அவர்களை சந்தித்து எனது மனு தொடர்பாக கேட்டேன். அதற்கு அவர் எப்போது மனு கொடுத்தீர்கள் என்று கேட்டார். அதற்கு நான் 16.07.2019 ஆம் தேதியன்று முதல்மனு எங்கள் பள்ளி தலைமை ஆசிரியர் மூலமாகக் கொடுத்ததாகவும், இரண்டாவதாக கூரியர் தபால் மூலமாக 09.09.2019ம் தேதி அனுப்பியதாகவும் சொன்னேன். அதற்கு அவர் OA-வை அழைத்து எனது மனு குறித்து கேட்டார்.

அதற்கு அவர் மனு வந்திருப்பதாகவும், சம்மந்தப்பட்ட செக்சனுக்கு அனுப்பியுள்ளதாகவும் கூறினார். அதற்கு DEO அவர்கள் பணிமாறுதல் தொடர்பான செக்சனிலுள்ள சூப்பிரண்டு முருகன் என்பவரை பார்க்கும்படி சொன்னார். நானும் அவ்வாறே அவரை சென்று பார்த்து எனது மனுவை பற்றி கேட்டபோது அவர் கிளார்க் ரமேஷ் சாரை பார்க்க சொன்னார். நான் கிளார்க் ரமேஷை சென்று பார்த்தேன். அப்போது அவர் உன்னுடைய பணிமாறுதலுக்கு ரூ.50000 செலவாகும் என்று சொன்னார். நான் அவரிடம் இது கவர்மெண்டுக்கு கட்டவேண்டிய காசா என்று கேட்டேன். அதற்கு அவர் நீ என்னையா வெவரம் புரியாத ஆளா இருக்க, இது எனக்கும், சூப்பிரண்டு முருகனுக்கும் உனக்கு பணிமாறுதல் ஏற்பாடு செய்வதற்கு ஆகும் செலவு என்று கூறினார். உடனே நான் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். திரும்பவும் 13.09.2019ம் தேதி மேற்படி ரமேஷ் என்னை என்னுடைய செல்போனில் தொடர்பு கொண்டு நான் கேட்ட பணம் என்னாச்சு என்று கேட்டார். நான் என்னால் அவ்வளவு பணம் தர இயலாது என்று கூறினேன் அதற்கு அவர் ரூ.30000 குறைத்துக்கொண்டு ரூ.20000 ஏற்பாடு செய்யும்படி கூறினார். நான் என்னிடம் அவ்வளவு வசதி இல்லை என்று சொல்லி போனை வைத்துவிட்டேன். அதன்பின்பு நான் 23.09.2019ம் தேதி காலை 11.00 மணிக்கு DEO அலுவலகம் சென்று சூப்பிரண்டு முருகன் அவர்களை சந்தித்து எனது மனு தொடர்பாக கேட்டேன். அதற்கு அவர் ரமேஷ் மீட்டிங் சென்றுவிட்டதாகவும், மாலை 03.00 மணிக்கு ரமேஷை வந்து சந்திக்கும்படியும் கூறினார். மீண்டும் நான் அன்றே மாலை 03.00 மணிக்கு தேனி DEO அலுவலகம் சென்று சூப்பிரண்டு முருகன் அவர்களை சந்தித்தேன். ரமேஷ் மீட்டிங் முடித்து வரவில்லை என்றும், கிளார்க் ரமேஷ் சொன்ன பணம் ரூ.20000-த்தை 25.09.2019ம் தேதி அவரது அலுவலகத்திற்கு கொண்டுவந்து கொடுத்துவிட்டு பணிமாறுதல் ஆணையை பெற்றுச்செல்லுமாறு சொன்னார். ரூ.20000-ம் லஞ்சமாக கொடுத்து பணிமாறுதல் பெற விருப்பமில்லாததால் நான் இந்த மனுவைக் கொடுக்கிறேன். தக்க நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd/-xxxxxx (P.சுரேஷ், 25.09.19)

Sir, Received the complaint on 25.09.2019 at 12.00 Hrs. A confidential verification was conducted in respect of the complaint through sources. Complaint was found to be genuine and reputation of the accused was found to be not good. Hence, after getting oral permission from the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti-Corruption, Chennai, I am registering a case in Theni V&AC Cr.No.07/2019, u/s 7 of P.C Act 1988, as amended by the P.C. (Amendment) Act 2018, on 25.09.2019 at 12.00 hrs and took up investigation.

Original FIR along with Original complaint of Tr.P.Suresh, S/o Pandian, No.4, Thotti Colony Street, Thenkarai, Periyakulam, Theni District is sent to the Chief Judicial Magistrate/Special Judge, Theni District.

(L.RAJU)
Deputy Superintendent of Police,
Vigilance and Anti-Corruption,
Theni District.